2023 அக்டோபர் 11]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே இது தெரியும், பெருந்துறையில் ரூ.224 கோடி செலவில், கொடிவேரி அணையிலிருந்து பெருந்துறைக்கு மட்டும் 27* MLD *நீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கால்நடைகளுக்கு தண்ணீர் வேண்டும் என்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மனிதர்களுக்கு தண்ணீர் தருகிறோம் என்று சொல்கிறேன். (சிரிப்பு) 27* MLD *நீர் வந்து கொண்டிருக்கிறது. அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தவும் வாய்ப்புள்ளது. புதிய திட்டம் இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதை அதிகப்படுத்தி மற்ற கிராமங்களுக்கும் நீர் செல்லும் வகையில் புதிய திட்டம் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

மாணவர் விடுதி

***75408—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர்கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகர்கோவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி கட்டடம் கட்டுவது குறித்து ஆய்வு செய்து, தேவை/முன்னுரிமை அடிப்படையில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.

திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாநகரத்தில், கோணம் பகுதியில் இயங்கி வருகின்ற அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிப்பதற்கு, அருகில் உள்ள பிற மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் வருகிறார்கள். நாகர்கோவிலில் இருந்து 40, 50 கி.மீ. தூரத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் படிக்க வருகிறார்கள். பேருந்துகளில் கல்லூரிக்கு வருவதற்கும், வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கும், மாணவர்களுக்கு சிரமம் ஏற்படுவதால், மாணவர்களின் நலன் கருதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டித் தரும்படி அரசை வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களின் தேவைக்கேற்ப அக்கல்லூரிக்கு அருகில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை சார்ந்த விடுதிகள் உள்ளன. ஆகவே, அந்த விடுதிகளிலே மாணவர்கள் தங்கிப் படிக்கலாம். அதுமட்டுமின்றி, அங்கே பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கான விடுதியும் உள்ளது. அந்த விடுதியிலும், அரசுக் கல்லூரி மாணவர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்த விடுதியை, இந்த

2023 அக்டோபர் 11]

அரசுக் கலைக் கல்லூரியின் விடுதியாகச் சேர்ப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிக்கு வருகின்ற மாணவர்கள் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டால், அதற்கு என் நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் பகுதியில் இருக்கும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 2016 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தற்பொழுது, 11 இளங்கலை பாடப் பிரிவுகள் அக்கல்லூரியில் மட்டுமே உள்ளன. இளங்கலை பாடப் பிரிவுகள் மட்டுமே அக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ, 1,800 மாணவர்கள் அந்தக் கல்லூரியில் பயின்று வருகிறார்கள். மாணவர்கள் படிப்பதற்குப் போதுமான கட்டட வசதி இல்லாமல் உள்ளது என்பதையும் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே கல்லூரிக்குத் தேவையான கட்டடங்களையும், auditorium *போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும், உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

கல்லூரியில் கணினி பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு கணினிகளை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, நூலக வசதி மற்றும் அனைத்துப் பாடப் பிரிவு மாணவர்களுக்குத் தேவையான ஆய்வக வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏழை மாணவர்கள் உயர் கல்வி பயில கல்லூரியில் முதுகலை பாடப் பிரிவுகளான M.A., M.Com., M.Sc. *போன்ற பாடப் பிரிவுகளை உடனே தொடங்க வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதன் பக்கத்தில் இருக்கின்ற அரசு பொறியியல் கல்லூரி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதுமே! சரி, கேட்டுவிடுங்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொறியியல் கல்லூரியில் போதிய*

உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்றும், தேவையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். நன்றி. ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதியைப் பற்றிக் கேட்டார். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர் குறிப்பிட்டதைப்போல, 1,794 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். அதில் 1,549 மாணவர்கள் உள்ளூர் மற்றும் வெளியூர்களிலிருந்து பேருந்துகளின்மூலம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே விடுதியிலே தங்கியிருப்பவர்கள் 245 பேர் மட்டும்தான். அதுகூட, நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று, BC students hostels, SC students hostels எல்லாம் இருக்கின்றன. அங்கேயும் மாணவர்கள் இன்னும் சேருவதற்கு தேவை இருக்குமானால் பள்ளி மாணவர்கள் சேருகிற அந்த விடுதியும் BC, MBC & Minorities Welfare Department-ன் மூலமாக இயங்குகின்ற விடுதியாக மாற்றப்படும். நீங்கள் அங்கே கட்டட வசதிகள், கல்லூரி வசதிகள், உயர் படிப்பு வசதி பற்றியெல்லாம் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இவ்வரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கல்லூரிகளினுடைய உட்கட்டமைப்புகளை மேம்படுத்த, பெருந்தலைவர் காமராஜர் பெயரில் அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்கு ரூ.1,000/- கோடி செலவில் ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு, அறிவித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, உயர் கல்வியினுடைய வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற பல்வேறு நடவடிக்கைகளிலே பெருந்தலைவர் காமராஜர் பெயரிலே அமைந்திருக்கிற திட்டமும் ஒன்றாகும்.

தற்போது 26 பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள், விடுதிகள், கழிப்பறைகள் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை மேற்கொள்ள 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.262 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை

2023 அக்டோபர் 11]

மொத்தம் ரூபாய் ஆயிரம் கோடி; அதிலே ரூ.262 கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக அந்தந்த கல்லூரிகளினுடைய தேவைகளுக்கேற்ப, அங்கே பயில்கின்ற எல்லா மாணவர்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப செய்து தரப்படும். இன்னும் கேட்டீர்களென்றால், அங்கே உள்ள கல்லூரிகளில் இடவசதிகூட இல்லாமல் இருக்கிறது. அதையும் நாங்கள் கோரியிருக்கிறோம். ஆகவே, அவையெல்லாம், வருங்காலங்களிலே முறையாக, படிப்படியாக, நிதிநிலைமைக்கேற்ப சரி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெருந்தலைவர் காமராஜர் பெயரில் கட்டடங்கள் கட்டுவதற்கு கல்லூரிகளுக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதை யாரும் வரவேற்றது போன்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.

திரு. செ. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். சுதந்திரப் போராட்ட வீரர் இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு நூறாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்ட இந்த வேளையில், தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களுக்கு பரமக்குடியில் அரசு சார்பில் முழு உருவ வெண்கல சிலை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர். . .(குறுக்கீடு) நன்றி சொல்கிறீர்களா?

திரு. செ. முருகேசன்: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைச் சொல்லி முடித்துவிடுங்கள். நன்றியைச் சொல்லி முடித்துவிடுங்கள்.

திரு. செ. முருகேசன்: வெண்கல சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய பரமக்குடி தொகுதியில் Agriculture college ஒன்று நிறுவிட மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடியில் காட்டு கருவேல மரங்கள் அதிகம்.—இராமநாதபுரம் மாவட்டம், வறட்சியான மாவட்டம். அங்கே ஒரு Agriculture college அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் நம் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் விவசாயத்திற்கென்று கோயம்புத்தூரிலே Agriculture University—தனி பல்கலைக்கழகமே உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பல்கலைக்கழகத்தின் மூலமாக பல்வேறு கல்லூரிகளும் செயல்படுவதற்கு வழிவகுத்தது கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான். இப்போது விவசாயப் பல்கலைக்கழகம், தனியாக நம்முடைய மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய பார்வையிலே இருக்கிறது. இப்போது அண்ணாமலை பல்கலைக்கழகத்திலேயும் நம்முடைய உயர் கல்வித் துறையின் சார்பிலே விவசாயத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கல்லூரிகளெல்லாம் கூடுமான அளவிற்கு விவசாய மாணவர்களுக்கான பயிற்சியையும் அளித்து, படிப்பறிவையும் ஊட்டுகின்ற விதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உங்கள் மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்று சொன்னீர்கள். வறட்சியான மாவட்டத்தில் Agriculture college என்பது தேவையில்லாத ஒன்று என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் உங்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதி மக்களினுடைய தேவைகளின் அடிப்படையிலே நானும், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும் பரிந்துரை செய்து, அங்கே தேவை ஏற்படின் நிதி நிலைமைக்கேற்ப வருங்காலங்களிலே அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.